## 21.02.2025–ந் தேதி நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கையின் நகல்

## <u>தேவகோட்டை நகராட்சி</u>

### அவசரக்கூட்டம்

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற அவசரக்கூட்டம் 21.02.2025-ம் தேதி வெள்ளிக்கிழமை நன்பகல் 12.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. தாங்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**(ஒப்பம்) கா. சுந்தரலிங்கம்**
**நகர்மன்ற தலைவர்,**
**தேவகோட்டை நகராட்சி.**

.

### <u>பொருள் – 37</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9, கல்லூரி சாலை பகுதியில் மழைகாலங்களில் மழைநீர் சாலைகளில் தேங்கி, கொசுக்கள் உற்பத்தியாகி பொது மக்களுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி சுகாதார சீர்கேடு ஏற்படாத வண்ணம் சுகாதார பணியின் அவசியம் கருதி புதிய மழைநீர் வடிகால் அமைக்க மதிப்பீடு ரூ.6,00,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் பணிக்கான செலவீனத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்** 37 - **அனுமதிக்கப்பட்டது .**

––

### <u>பொருள் – 38</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் நகராட்சிக்கு சொந்தமாக குடிநீர் ஆழ்துளை கிணறுகள் அதிகம் உள்ளன. ஆழ்துளை கிணறுகளை சுற்றி பாதுகாப்பு தொட்டி ஏதும் இல்லாமல் திறந்த வேலியாக உள்ளது. வாகனங்கள் இடித்து ஆழ்துளை கிணறு சேதம் அடைய வாய்ப்பு உள்ளது. மேலும் பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதியும் ஆழ்துளை கிணறுகளை சுற்றி சிமெண்ட் தொட்டி அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9,00,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்** 38 - **அனுமதிக்கப்பட்டது .**

––

## பொருள் – 39

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6, பூசைக்கார நாச்சியப்பன் குறுக்கு தெருவின் சாலை மிகவும் மோசமாக உள்ளது. பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் சாலை மேடு பள்ளமாக காணப்படுகிறது. வாகன ஓட்டிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாக நேரிடுகிறது. மேலும் மழை காலங்களில் பள்ளமான பகுதியில் நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாகி பொது மக்களுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் இடத்தில் புதிய பேவர் பிளாக் சாலை அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6,00,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 39 - அனுமதிக்கப்பட்டது .**

--

## பொருள் – 40

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8, விவேகானந்தபுரம் கிழக்கு பகுதியில் சாலை மிகவும் மோசமாக உள்ளது. பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் சாலை மேடு பள்ளமாக காணப்படுகிறது. வாகன ஓட்டிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாக நேரிடுகிறது. மேலும் மழை காலங்களில் பள்ளமான பகுதியில் நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார கேடு உருவாகிறது. இதனால் பொது மக்களுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் இடத்தில் புதிய பேவர் பிளாக் சாலை அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6,00,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 40 - அனுமதிக்கப்பட்டது .**

--

## பொருள் – 41

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25, கிருஷ்ணராஜபுரம் வடக்கு தெரு பகுதியில் சாலை மிகவும் மோசமாக உள்ளது. வாகன ஓட்டிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாக நேரிடுகிறது. மேலும் மழை காலங்களில் பள்ளமான பகுதியில் நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார கேடு உருவாகிறது.. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் இடத்தில் புதிய பேவர் பிளாக் சாலை அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6,00,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 41 - அனுமதிக்கப்பட்டது .**

--

## பொருள் – 42

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருக்களில் மழைநீர் சாலைகளில் தேங்கா வண்ணம் வழிந்து ஓட ஏதுவாக மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டதால் தூர்ந்துபோய் தண்ணீர் ஓட வழியில்லாமல் ஆங்காங்கே தேங்கி சுகாதார சீர்கேட்டினை ஏற்படுத்துகின்றன. தெருக்களில் தண்ணீர் தேங்காமல் வழிந்தோட வடிகால்கள் அமைப்பது அத்தியாவசியமாகிறது. மேலும் சில பகுதிகளில் புதிதாகவும், இணைப்பிற்காகவும் வடிகால்கள் கட்ட வேண்டியுள்ளது. எனவே பொது மக்களின் சுகாதார நலன் கருதி புதிதாகவும் மற்றும் இணைப்பு வடிகால்களும் கட்டிட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.20,00,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 42 - அனுமதிக்கப்பட்டது .**

--

## பொருள் – 43

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட இறகுசேரி, நடராஜபுரம் மற்றும் ஆவரங்காடு பகுதிகளில் உள்ள மயானத்திற்கு செல்லும் பாதை மண் பாதையாக உள்ளதால் அப்பகுதி பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று பேவர் பிளாக் கல்தளம் அமைக்க ஆகும் செலவீனம் ரூ.10,00,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 43 - அனுமதிக்கப்பட்டது .**

--

## பொருள் – 44

தேவகோட்டை நகராட்சியில் 2024-25ம் நிதியாண்டில் நடைபெற்று வரும் பல்வேறு திட்ட பணிகளை மாலைமலர் நாளிதழில் விளம்பரம் வெளியிட்ட வகையில் செலவீன பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | நாளிதழ் நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|---|
| 1 | மலர் பப்ளிக்கேஷன்ஸ் லிமிடெட் | MDU-D2501010138 | 27,000/- |

மேற்காணும் விபரப்படி விளம்பரம் வெளியிட்டதற்கு மலர் பப்ளிக்கேஷன்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரிடம் இருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.27,000/-க்கு செலவீனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 44 - அனுமதிக்கப்பட்டது .**

––

## பொருள் – 45

சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் மதிப்பீட்டு குழு (2024-2025) ஆய்வு செய்வது சம்மந்தமாக கடித எண்.9528/2024-2, சமபேசெ (ம.கு), நாள்-04.12.2024 அன்றைய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து தேவகோட்டை நகராட்சியில் 2021-22 நிதியாண்டில் தொடங்கி 2024-25 நிதியாண்டு வரை உள்ள திட்ட பணிகள் மற்றும் அனைத்து பிரிவுகளிலும் உள்ள விபரங்கள் அடங்கிய அறிக்கை தயார் செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. மானாமதுரை, சிவகங்கை மற்றும் தேவகோட்டை ஆகிய மூன்று நகராட்சிகளின் விபரங்கள் அடங்கிய அறிக்கை புத்தகம் 30 எண்ணம் தயார் செய்திட ஆகும் செலவீனம் ரூ.5,000/- ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 45 - அனுமதிக்கப்பட்டது .**

––

## பொருள் – 46

சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் (சந.8(1)துறை, அரசாணை (நிலை) 50 நாள் 17.07.2023ன்படி நகர்ப்புற பகுதிகளில் உள்ள குழந்தைகள் பாதுகாப்பினை உறுதி செய்ய ஏதுவாக நகர் பகுதிகளில் வார்டு அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கள் அமைத்து கண்காணிக்க ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையின்படி நகராட்சி வார்டு உறுப்பினர்களை குழுத் தலைவர்களாக கொண்டு வார்டு அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு அமைக்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் 46 - அனுமதிக்கப்பட்டது .**

––

## பொருள் – 47

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் மாவட்ட ஆட்சியர் அலுவலக JCB இயந்திரம் பயன்படுத்திய வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலககடித ந.க.எண்.பி2/26535/2020, நாள் 25.01.2025-ன்படி, நிலுவைத்தொகை ரூ.1,99,820/-யினை மாவட்ட ஆட்சியர், அலுவலகத்தின் வங்கி கணக்கு எண்.00840100069803-ல், வரவு வைக்க மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும்.

**அலுவலகக்குறிப்பு-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.5150/2021/எச்1)

**தீர்மானம் 47 - அனுமதிக்கப்பட்டது .**

--

**பொருள் – 48**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12, சுப்பிரமணியபுரம் புதுத்தெரு குறுக்கு தெருவின் சாலை மிகவும் மோசமாக உள்ளது. பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் சாலை மேடு பள்ளமாக காணப்படுகிறது. மேலும் மழை காலங்களில் பள்ளமான பகுதியில் நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார கேடு உருவாகிறது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் இடத்தில் புதிய பேவர் பிளாக் சாலை அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6,00,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 48 - அனுமதிக்கப்பட்டது .**

--

**பொருள் – 49**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22, குழந்தை வேலன் சந்து மண் சாலையாக மிகவும் மோசமாக உள்ளது. பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் சாலை மேடு பள்ளமாக காணப்படுகிறது.. மேலும் மழை காலங்களில் பள்ளமான பகுதியில் நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார கேடு உருவாகிறது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் இடத்தில் புதிய பேவர் பிளாக் சாலை அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6,00,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 49 - அனுமதிக்கப்பட்டது .**

--

(ஒப்பம்) கா. சுந்தரலிங்கம்
நகர்மன்ற தலைவர்,
தேவகோட்டை நகராட்சி.

/உண்மை நகல் /

மேலாளர்,
தேவகோட்டை நகராட்சி